FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318756

1. District **Tiruvannamalai** PS: **V&AC** Year: **2026** FIR No. **10/2026** Date: **07.10.2026**
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: **as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from **05.10.2026** Date to : **15.30 hrs**
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : **06.10.2026** Time : **18.00 Hrs**
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) **07.10.2026 Vol - III** Time : **07.00 Hrs**
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : **Computer Typed**
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: **3 kms North**
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : **Fire and Rescue Services, Collectorate Campus, Vengikkal, Tiruvannamalai**
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : **Dr.T.Ganesh** (b) Father's/ Husband's Name : **S/o.Tamizhmani**
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : **Age-34** (d) Nationality **Indian** (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : **Doctor** (g) Address : **No.108, Mashar junction Road, Nayambadi Village, Chengam Taluk, Tiruvannamalai District**
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Saravanan, ADFO, Tamil Nadu Fire and Rescue Services Department, Tiruvannamalai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: ------
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ------

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ------

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 06.10.2026 ஆம் தேதி மாலை 18.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் த.கணேஷ், வயது.34 த/பெ தமிழ்மணி, கதவு எண்.108, மஷார் கூட்டு சாலை, நயம்பாடி கிராமம், செங்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: திருவண்ணாமலை நாள்:06.10.2026 அனுப்புநர் த.கணேஷ், வயது.34 த/பெ தமிழ்மணி, கதவு எண்.108, மஷார் கூட்டு சாலை, நயம்பாடி கிராமம், செங்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் செல்.9361343034 பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை அய்யா, நான் நயம்பாடி கிராமத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 2017-ஆம் ஆண்டு உக்ரைன் நாட்டில் MBBS., மருத்துவப்படிப்பு படித்து முடித்தேன். நான் தற்போது எனது மேற்படி முகவரியில் வீட்டுடன் இணைந்தவாறு

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

07/10/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.10.2026.
0800 hrs

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

07.10.2026

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....

தனியாக 150 சதுரஅடியில் ஆரோக்கியவனம் என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வருகிறேன். தற்போது அந்த மருத்துவமனையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விரிவுபடுத்துவதற்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையிடமிருந்து பாதுகாப்பு குறித்த தடையில்லாச்சான்று பெற வேண்டி 22.09.2026-ஆம் தேதி தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை (Tamil Nadu Fire and Rescue Services) என்ற இணையதளம் மூலமாக விண்ணப்பம் (ID No.415942) செய்திருந்தேன். அந்த விண்ணப்பத்துடன் சைட் பிளான், கிளினிக் டோப்போ பிளான், பில்டிங் எலிவேஷன் பிளான், Google Map லொகேஷன் ஆகியவற்றை பதிவேற்றம் செய்து அனுப்பியிருந்தேன். அதன்பேரில் கடந்த 25.09.2026-ஆம் தேதி எனது மொபைல் எண். 9361343034-வுக்கு மதியம் சுமார் 1 மணிக்கு 9443157896-இல் இருந்து அழைப்பு வந்தது, அதில் நான் தீயணைப்புத்துறையில் இருந்து பேசுகிறேன், உங்களது கிளினிக் எங்குள்ளது என கேட்டார். நான் மேற்படி எனது மருத்துவமனையின் இருப்பிடத்தை அவருக்கு தெரிவித்தேன். சிறிது நேரத்தில் எனது மருத்துவமனைக்கு வெள்ளை நிற Hyundai காரில் இருவர் வந்தனர். அதில் ஒருவர் காக்கி சீருடையில் வந்திருந்தார். அப்போது காரில் இருந்து சீருடை இல்லாத ஒருவர் வந்து தனது பெயர் சரவணன் என்றும், திருவண்ணாமலை தீயணைப்புத்துறையில் ADFOவாக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கூறினார். ஆன்லைன் மூலம் வரப்பெற்ற உங்களது தடையில்லா சான்று கோரிய மனுசம்மந்தமாக களஆய்வு மேற்கொள்ள வந்திருப்பதாகவும், இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட கோப்புகளின் ஆவணங்களின் நகல்களை கேட்டார். நான் அவைகளை எடுத்து கொண்டு வந்து அவரிடம் கொடுத்தேன். அப்போது அவர் தடையில்லா சான்று தருவதற்கு பணம் செலவாகும் என சொல்லி சென்றுவிட்டார். அதன்பின்பு நான் கடந்த 30.09.2026-ஆம் தேதி மாலை சுமார் 3 மணியளவில் திருவண்ணாமலை மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலகத்திற்கு சென்றிருந்தேன், அப்போது அவர் அலுவலகத்தில் இல்லை. நான் எனது செல்போனிலிருந்து அவரது செல்போனிற்கு தொடர்பு கொண்டு பேசியபோது, தான் வேலூரில் இருப்பதால் திங்கட் கிழமை நேரில் வந்து பேசலாம் என்று கூறி வைத்துவிட்டார். அதன்பின்பு நிங்கள் கிழமை 05.10.2026-ஆம் தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் மனுசம்மந்தமாக திருவண்ணாமலை மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலகத்திற்கு சென்று, அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்து தீயணைப்புத்துறை தடையில்லா சான்று சம்மந்தமாக கேட்டபோது அவர் தடையில்லா சான்று தருவதற்கு இலஞ்சமாக ரூ.25,000/- தரவேண்டும் என கேட்டார். நான் மருத்துவமனையை பொதுமக்களுக்கு சேவை செய்யும் எண்ணத்தில் நடத்தி வருகிறேன் என்று கூறினேன்.

அதற்கு அவர் வேண்டுமானால் குறைத்துக்கொண்டு ரூ.10,000/-த்தை எனக்கு இலஞ்சமாக கொடுத்தால் மட்டுமே உங்களுக்கு தடையில்லா சான்று வழங்க முடியும் என்றும், கேட்டபடி பணத்துடன் வந்தால் உங்களது வேலையை உடனடியாக முடித்துக்கொடுத்துவிடுகிறேன் என்றும் கூறினார். எனக்கு தடையில்லா சான்று பெற ADFO சரவணன் அவர்களுக்கு ரூ.10,000/- இலஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே என்னிடம் இலஞ்சம் கேட்ட ADFO சரவணன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு தருகிறேன். இப்படிக்கு, (Sd-XXXXX) T.Ganesh 06/10/2026

Sir/Madam,

Received the complaint on 06.10.2026 at 18.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 07.10.2026 at 07.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.10/2026, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd-XXXXX) இரா.அருள்பிரசாத், கா.ஆ, ஊ.த.க.பிரிவு, திருவண்ணாமலை. 07.10.2026

The FIR in original along with the complaint is being sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned.

இரா.அருள்பிரசாத், 07/10/2026
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருவண்ணாமலை.